| அ.வ.எண். | 244/2014 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | மாணிக்கம் | நாள் | 23.09.2021 |
| தகப்பனார் பெயர் | குப்புசாமி | | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

செல்லமுத்து யாரிடமிருந்து விலைக்கு வாங்கினார் என்றால் அவருடைய சொந்த நிலம். அந்த செல்லமுத்து 1ம்பிரதிவாதியின் சின்ன தாத்தா. என்னுடைய பாட்டி பெயர் பச்சியம்மாள். என்னுடைய பாட்டி பெயர் பச்சியம்மாள் என கூறுவதற்கு வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு தெற்கே முனியண்ணன் மகன்கள் தம்பியண்ணன், பச்சியண்ணன் நிலங்கள் உள்ளது என்றால் ஆமாம். சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் 1981ல் பாகபிரிவினை ஏற்பட்டது என கூறுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாய்மொழி பாகம் தான். பாகபிரிவினையில் எனக்கு கிடைத்த மற்ற சொத்துகளின் சர்வேஎண்ணை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 20.11.1940 பத்திரத்தை குறித்து வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்குரையுடன் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரய பத்திரத்தில் எவ்வளவு நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 40 செண்ட். அதில் எங்களுக்கு 40 செண்ட் பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனது தகப்பனாருக்கு 20 செண்ட், என்னுடைய சித்தப்பாவிற்கு 20 செண்ட். என்னுடைய சித்தப்பா பெயர் சாமியப்பன். 1940 பத்திரத்தில் ஒரே ஒரு சர்வே எண் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1940 பத்திரம் குறித்து 1940லேயே எனக்கு தெரியும். நான் யாருக்காவது விற்பனை செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என கூறுவதற்கு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வாய்மொழி பாகம் தான் என கூறியுள்ளேன். என்னுடைய சொத்திற்கு இணைந்தார்போல் பிரதிவாதிகளின் சொத்து எந்த பக்கத்தில் உள்ளது என்றால் ஒட்டினாற்போல் இல்லை என்னுடைய சித்தப்பா சாமியப்பன் சொத்திற்கு அடுத்து உள்ளது. அந்த இடத்தில் தான் 1ம்பிரதிவாதியின் குடும்ப சொத்துகள் உள்ளது என்றால் ஆமாம். அது சாமியப்பன் நிலத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது. பிரதிவாதிகளின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

பிரதிவாதிகள் யார் யார் விலைக்கு கேட்டார்கள் என்றால் சேகர், சிவகுமார், கோவிந்தன், ரத்தினம், செல்வம் மற்றும் அடையாளம் தெரிந்த சில பேர். மற்ற நபர்களை சேர்க்கவில்லை என்றால் ஆமாம். கொடுக்க மறுத்ததால் என்ன இடையூறு செய்ததாக கூறுகிறேன் என்றால் ரோடு கேட்டு வற்புறுத்துகிறார்கள். எனவே நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன். ரோடு கேட்டு மிரட்டி ரோடு போடுவதாக கூறியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் 15.09.2003 லேயே ஏற்பட்ட தடபாத்திய ஒப்பந்த படி பாதை உள்ளது என்றால் அவ்வாறு அமைக்கவில்லை அது பொய்யானது. வழக்கு சொத்தை ஒட்டி மலமானூர் செல்லும் சாலை உள்ளது என்றால் ஆமாம். அந்த ரோடு எந்த திசையை நோக்கி செல்கிறது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்கிறது. என்னுடைய நிலத்திற்கு வடக்கே செல்கிறது. ரோட்டிற்கு வடபுறம் டிரான்ஸ்பார்ம் உள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் அந்த ரோடும், டிரான்ஸ்பார்மும் உள்ளது என்றால் இல்லை. நீதிமன்றத்தில் ஆணையாளரை நியமித்து அந்த ரோடு உள்ளதா இல்லையா என பார்க்க ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

ஒப்பம்/-எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.